உ

சிவமயம்.

ஸ்ரீ, காணாட்டுடையார், இளசைத்திருக்கோயிலுடையார்,
அகோர சிவாச்சாரியாரது சிஷ்ய பரம்பரையாதீனர்,
பட்டினத்தடிகள் மரபினர்,
ஆண்டிப்பட்டி ஜமீன்தார்,
ஸ்ரீமான்
சாத்தப்ப, ராமநாத, முத்தைய, சிதம்பர,

## பெத்தாச்சி செட்டியார்

அவர்கள்பாலாற்றுப் படுத்திய

# புலவராற்றுப்படை.

திரிசிரபுரம்
வித்வான்
அமிர்தம், சுந்தரநாத பிள்ளை
இயற்றியது.



ஸ்ரீரங்கம் :
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1916.

விலை அணா 4.

உ

சிவமயம்.

# சாற்றுக்கவிகள்.

ஸ்ரீரங்கம், ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும், வித்துவானு மாகிய, மகா-ா-ா-ஸ்ரீ, குரு, சுப்பிரமணிய ஐயர் அவர்கள் சாற்றிய சாற்றுக்கவி.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பேர்கொண்ட தனவணிக குலமணியாம்
பெத்தாச்சிப் பெயர்கொள் வள்ளல்
நீர்கொண்ட சடைக்கடவுட் பத்தியுநன்
கொடையுமுத னீர்மை யெல்லாம்
ஏர்கொண்ட புலவராற் றுப்படையா
னிலமைத் தெங்கு மோங்கச்
சீர்கொண்ட சுந்தரநா தப்புலவ
னறுந்தமிழாற் செப்பி னானே.

மதுரைத்தமிழ்ச்சங்கநூற் பரிசோதகராயிருந்த மகா-ா-ா-ஸ்ரீ, மு. ரா. அருணாசலக்கவிராயர் அவர்கள் சாற்றிய சாற்றுக்கவி.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

வானாடு குபேரனைப்பெற் றதுபோல மண்ணாடு
மதிக்கத் தக்க

காளுடு காத்தானும் பெற்றிடுபெத் தாச்சிதன
கனவான் பேரிற்
றேளுடு மின்சொல்லாற் புலவராற் றுப்படைநூல்
செய்தான் கற்றோர்
பாளுடு மதியினுயர் சுந்தரநா தப்பேர்கொள்
பாவ லோனே. 1.

அரியநூ லாராயுந் தான்பெற்ற பயன்றன்போ
லறிஞ ரெல்லாம்
உரியதாக் கொண்டுவப்பா னிந்நூலை யுளுற்றியன்பே
யுள்ள மெங்கும்
விரியவுத வியதாற்று மின்புறுவ தென்றதமிழ்
வேத மென்னும்
பெரியதிருக் குறளுக்கோ ரிலக்காளு னிவன்பெருமை
பேசற் பாற்றே. 2.

---

திரிசிரபுரம், நாஷநல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்
பண்டிதரும், மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவரும்,
சங்கப் பரீட்சாதிகாரிகளில் ஒருவருமாகிய
ஸ்ரீ. உ. வே. **A. M.** சடகோபராமாநுஜாசார்யர்.
சாற்றிய சாற்றுக்கவி.

செங்கயல் விழியார் தங்கள் செவ்விய
நடையைக் கற்பான்
பொங்குநற் றடங்க ளெல்லாம் போந்தனங்
காத்து நின்று

தங்கெழி லாண்டிப் பட்டித் தனியா
சாட்சி செய்யும்
எங்களுத் தமன்பெத் தாச்சி யின்புகழ்
தோன்ற வென்றே 1
பொற்பமை தமிழ்ச்சொற் கொண்டு புலவர்கூட்
டுண்ணு மாறு
பற்றுறு புலவ ராற்றுப் படையெனு
நூலைச் சொற்றான்
விற்பன விவேகி யாகும் விளங்குசுந்
தரநா தப்பேர்
நற்றமிழ்ப் புலமை மிக்க நற்கவிச்
சிங்க வேறே. 2

---

திரிசிரபுரம், சென்டுஜோசப் காலேஜ், தமிழ்ப் புலவர்
மகா-ா-ா-ஸ்ரீ, T. R. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்.
சாற்றிய சாற்றுக்கவி.

தேமேவு வளச்சோலைக் காடு காத்தானிற்
றிகழுஞ் செம்மல்
மாமேவு பிறைச்சடையார் பத்திமிகு பெத்தாச்சி
வள்ளல் பேராற்
றாமேவு புலவராற் றுப்படையென் றோர்நூலைச்
சொற்றா னெங்கள்
நாமேவு புகழ்மிலைந்த சுந்தரநா தப்பெரிய
நாவ லோனே.

---

திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் திராவிட பாஷா
பண்டிதர் மகா-௱-௱-ஸ்ரீ V. S. வேங்கட்டராவ்
அவர்கள் சாற்றிய சாற்றுக்கவி.

பலவளமும் படைத்தோங்குங் கானாடு
காத்தானிற் பரவத் தோன்றி
நிலமுழுதுங் கொண்டாட நிலைத்திருக்கும்
பெத்தாச்சி நேர்மை யாளன்
குலவுபுகழ் தோன்றவெனப் புலவராற்
றுப்படையாங் குணமார் நூலை
இலகுபுகழ்ச் சுந்தரநா தப்புலவன்
நறுந்தமிழா லியம்பி னானே.

---

தஞ்சை, இலக்கண உபாத்தியாயர்
மகா-௱-௱-ஸ்ரீ மு. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள்
சாற்றிய சாறறுக்கவி.

வளமலிசீர்க் கானாடு காத்தானிற் பிறந்துவளர்
வள்ள லாகும்
இளகுறுமா வருளுடைய பெத்தாச்சித் தனதன்பே
ரிலக வென்றே
உளமகிழாற் புலவராற் றுப்படையா மோர்நூலை
யுரைத்தா னெங்கள்
களமிடற்றூர் பதமறவாச் சுந்தரநா தப்பேரார்
கவிச்சிங் கேறே.

---

மதுரை, சிவஞானதீபச்சபைக் காரியதரிசி
மகா-ா-ா-ஸ்ரீ, ம. அழகர்சாமிபிள்ளை அவர்கள்
சாற்றிய சாற்றுக்கவி

மாநாட்டுண் மிக்கதிருக் காளுட்டிட் பிறந்துதமிழ்
வாய்ந்த மேலோன்
நாநாட்டும் புகழ்ப்பெரிய பெத்தாச்சிக் குலவணிகன்
நலங்கள் தோன்றப்
பாநாட்டுந் தமிழ்நாட்டிற் புலவராற் றுப்படையென்
பண்பார் நூலை
மீநாட்டுந் தமிழ்ப்புலமைச் சுந்தரநா தக்கவிஞன்
விளம்பி னுனே.

---

மதுரை, நன்மை பரிபாலன சபை யமைச்சரும்,
டர்பார் மெடிக்கல் காலின் தலைவருமான
மகா-ா-ா-ஸ்ரீ, S. ஆறுமுகம்பிள்ளை அவர்கள்
சாற்றிய சாற்றுக்கவி.

நதியிதழி யிலைந்தபிரான் பதம்போற்று நாவுடைய
நாக ரீகன்
மதிமிகுநற் பெத்தாச்சி வள்ளல்புகழ் மாநிலத்தில்
வளர வென்றே
யதிமதுரத் தமிழ்ப்பாவாற் புலவராற் றுப்படையா
மழகார் நூலைத்
துதிமிகுசெந் தமிழ்வண்மைச் சுந்தரநா தப்புலவன்
சொற்று னுய்ந்தே.

---

இந்நூலாசிரியரின் மாணாக்கரும், மகா-ா-ா-ஸ்ரீ, இராம
சேஷ ஐயர் அவர்களின் குமாரருமாகிய
மகா-ா-ா-ஸ்ரீ, T. R. கோவிந்தராஜ ஐயர்
அவர்கள் சாற்றிய சாற்றுக்கவி.

ஆறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பொன்விளையும் பழனமிகு காணுடு
காத்தாளும் புகழ்சேர் நாட்டில்
மன்மதனை நேரழகுந் தனதனைநேர்
செல்வமுந்தென் மலயக் கும்பன்
என்னுமியற் றமிழ்வளமுங் கொண்டுதித்தாண்
டிப்பட்டி யியலார் நாட்டில்
மன்னுமர சியல்செலுத்துங் கோமானும்
பெத்தாச்சி மன்னன் பேரால். 1

புலவராற் றுப்படையென் றொருநூலை
வளத்தமிழாற் புகன்றான் சேடக்
குலவராக் கொண்டுபரித் திடுமுலகிற்
றமிழ்க்கவிதை கூறும் வல்லார்
பலவரா லும்மதித்துக் கவிச்சிங்க
மெனத்துதிக்கும் பான்மை பெற்றுப்
புலவரா யுயர்ந்தார்க்கு முயர்ந்திடுசுந்
தரநாதப் புகழோ னம்மா. 2

சிவமயம்.

# புலவராற்றுப்படை.

## முகவுரை.

புலவனை யாற்றுப் படுத்திக் கூறு மாற்றானே, இது, புலவராற்றுப்படை யெனவாயது.

இது, "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு, மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்," என்னும் மக்கட் பகுதியுளடங்கிய செந்துறைப் பாடாண் பாட்டாம்.

இதனைத் "தேருளைப்புரவி" என்ற கம்பர் வாக்கானும் பிறவற்றானுங் கண்டு தெளிக.

இவ்வாற்றுப்படை, கருவிலேயே திருவுடைய வள்ளலாகிய ஆண்டிப்பட்டி ஜெமீன்தாரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்து உதவித் தலைவருமாகிய ஸ்ரீமான் சா. ராம. மு. சிதம்பர, பெத்தாச்சிச் செட்டியார் S. R. M. M. C. T. அவர்கள்பாற் பரிசில் பெற்ற வொருபுலவன் பரிசில்பெற விரும்பிய மற்றொரு புலவனை யது பெறுமாறு கூறி அவனை அவரிடத்து ஆற்றுப்படுத்தியதாம்.

அமிர்தம், சுந்தரநாதன்.

## தந்தையார் துதி.

தித்திக்குஞ் செந்தமிழை யைந்திலக்க
ணத்தோடுந் திகழ வூட்டி
முத்திக்கு வித்தான முழுமுதலின்
றன்னிலையை முறையிற் காட்டிச்
சித்திக்கு மிந்நிலைநில் லென்றருளி
யின்றுமேற்குத் தெளிவை நாட்டு
மெத்திக்கும் புகழெந்தை யமிர்தகவி
நாவலன்றா ளிறைஞ்சு நெஞ்சே.

உ

சிவமயம்.

கடவுள் துணை.

ஆண்டிப்பட்டி ஜமீன்தார்
ஸ்ரீமான் சா. ராம. மு.
சிதம்பர பெத்தாச்சி செட்டியார் அவர்கள்
பால் புலவனை ஆற்றுப்படுத்திய

# புலவராற்றுப்படை.

---*---

## காப்பு வெண்பா.

பொற்பார் தமிழாற் புலவராற் றுப்படையைக்
கற்பார்பெத் தாச்சியெனுங் காவலன்பேர்—முற்பாவ
நானிசைக்கு முன்னே நவிலேங் கரக்கடவுள்
தானிசைந்தென் னுவருமே தான்.

---

## நூல்.

### நேரிசை ஆசிரியப்பா.

ஓங்கெழிற் கதிரோ னீங்கலில் வெயின்
[முன்
வீங்குமுந் நீர்சூழ்பாங்குறு நிலன்வாய்
வெளியிடைத் தோன்று மொளியுடை
[வெற்பெனத்

துளிபெயன் மேகந் துதைவுறு விசும்பிற்
காமுறக் கவினுங் கலைநிறை மதியென
நாமுறு கருங்கட னடுவாய் கிழித்து
நிலமிசைத் துன்னிய நிறையிருட் குழாத்தை
நலமிகக் காய்ந்து நடுங்கி யிரிதரப்
பல்கதிர் பரப்பும் பரிதியங் கோளென
வல்கலில் புகழோ டனைவருங் காண்டர
வுயரிய தோற்றமு முறுநறு நிலையுஞ்
செயிரறச் சிவணிச் செப்பமா யமையச்
செவியகங் கேட்டார் சிறப்பினைக் கண்டா
பவியென வேட்டுள் ளகங்கொள நினைத்தார்
காதுங் கண்ணுங் கருத்துங் களிக்க
வோதும் பண்ணு முயரிய வனப்புங்
களிமிக வூட்டு மளிமிகு பொருளுந்
தெளிவிலா மாக்க ளொளியொடே யுணர
வறியா மையை யகற்றி யறிவைச்
செறிவா யூட்டுஞ் சிறப்பமை யொளியுங்
கொண்டு தனக்குக் குண்டுநீ ருலகி
லண்டிடு மொப்பிலா வருந்தனித் தெனவா
யினிமைய தென்னு மேண்மிகு பொருட்டாய்
நனி யுயர் பெயர்கொளு நலத்தமை தமிழைக்
கற்றறி புலவ! கற்றறி புலவ!!
சொற்சுவை யமைய நற்கவி நாளும்
பாடும் வன்மைப் பாவல் லோயே!

வாடு முகனொடு வந்தனை நெடுவழி
பலபல புலந்து பகரும் வாயினை
நிலமிசை நீணா ணீநடந் தெய்த்தனை
திரள்பொன் குவித்தறஞ் செய்யா மூடரை
வரள்குளங் காயா மரங்கல் லாவென
வந்திரப் போர்க்கு வழங்காப் புல்லரை
இந்திரன் றானென வெண்ணி யழியுஞ்
சிறுவாழ் வமைந்த சீரிலாக் கயவரை
யுறுவீழ் வன்ன வுரைசெயு மூர்க்கரைப்
பொருள்நனி தேடிப் புதைத்தழி யெளியரை
யருள்சிறி தில்லா வகமுடை மடையரை
யுவர்நீர்க் கடலென வொருபயன் செய்யாக்
கவர்சேர் நெஞ்சக் கபடர் தம்மைப்
பாடிப் பாடிப் பயனொன் றின்றித்
தேடி யொருவனை நாடி நடந்தனை
முற்செய் நோன்பான் முன்னுற வென்னை
யிற்றையிங் கெதிர்ந்தா யினிநீ வாழி
யவலங் கெடுகநின் னகமிக மகிழ்க
தவலருங் கேள்வித் தன்மைப் புலவ !
மன்னொரு புலமைநீ யன்ன யானு
நன்னதி தங்கிய துன்னிருஞ் சடையா
னுயர்மதிற் கூடலி னொருமூன் றுசங்கத்
தயர்வறத் தலையா யமர்ந்தினி தாய்ந்த
வொண்டீந் தமிழை யுள்ளுற நசைஇத்
தண்டா வார்வந் தழைத்துள் ளோங்கச்

சிமையப் பொதியத் திமையவர் வேண்ட
வமைவட புலத்தி னுழ்வுந் தாழ்வு
மகற்றிநன் னிலன்சம னாகிட வென்றே
தகவந் திருந்த தவமுனி யகத்தியன்
றந்தநூ லாகு முந்துநூல் தன்னையு
மந்தநூல் வழியே வந்தமைந் திலகுந்
தொல்காப் பியமுதற் பல்காப் பியமா
நல்லியல் நூல்பல நன்காய்ந் தறிந்திவ
ணெழுத்துஞ் சொல்லும் விழுத்தகு பொருளும்
வழுத்துநல் லியாப்பு மழுத்தமா ரணியு
மெஞ்சா துணர்ந்து பஞ்சகா வியமும்
விஞ்சிய பிறவும் வியன்பொருண் மிடைந்த
பத்துப் பாட்டுட னெட்டுத் தொகையு
மொத்த சிறப்பி னுயரிய நெறிபுக
லொன்பதி னிரட்டித் துன் னுகீழ்க் கணக்குமா
மன்னிய சங்க மரீஇய நூல்களும்
சமய குரவருஞ் சந்தான குரவரு
மமைய வெழுதிய வருண்மிகு ஞான
நூற்றொகை யோடு போற்றுநன் முனிவர்
சாற்றிய சாத்திரஞ் சார்தரு புராணமுங்
கம்பன் முதலாக் கலையறி புலவ
ரம்புவிக் கணியா வமைதர வைத்த
வருநூற் கடலு மகமுறக் குடித்தே
வருமத நூலுந் தருக்கமும் வலனுறக்
கற்றமை கருத்துடன் கனிதமிழ் நாற்கவி

யுற்றொரு கணத்தி லுரைத்திடும் வாய்வளம்
பெற்றனன் பெரிதுற முற்றுநன் கமைய
பாற்படு திறமிவை பழியிலென் முன்னோர்
போற்றிடு நோன்பா லேற்றனன் யானே
யாற்றல்சால் புலமை யமைந்தவென் றந்தையுந்
தந்தையின் றந்தையு முந்தவன் றந்தையும்
பைந்தமி ழுணர்ந்த பண்பமை புலவர்
அதனால், இத்திறம் யானுற லிறும்பூ தன்றே
சித்திரத் தமிட்டிறஞ் சேர்ந்துமென் பயனே
யஞ்சலென் றலையை யளிக்குதுங் கொடுபோய்
விஞ்சுமென் னிளவல் வியன்கரந் தருதி
செம்பொன் கோடி தருவன் கோடி
யிம்பருன் வறுமை யிலதாம் வாழுதி
தப்பிலாப் புலவோய் தக்கதீ தென்றே
ஒப்பிலா மணிக்குரை யொருபெருங் குமுண
[னுஞ்
சகரனு நளனுஞ் சார்தரு நிருதியு
மகமகிழ்ந் தளிக்குந் துந்து மாரியுஞ்
செம்பிய னும்மாஅந் திகழ்புகழ் நிறீஇய
விம்பர்சொ லெழுமுதல் வள்ளலென் போரு
மதான்று, இடையெழு வள்ளலென் றெவருங்
[கூறு
நடைசிறந் தீந்த நவிலக் குரூரும்
அந்தி மானு மரிச்சந் திரனுஞ்
சந்தி மானுஞ் சாற்றுநற் கன்னனுங்

தகுசிசு பாலனுந் தந்தவக் கிரனுமா
மிகுமிவர் தம்மொடும் வெவ்வராத் தந்த
வவிரொளி நீல வருங்கலை யதனைக்
கவினிய வாலமர் கருதிறை யோற்கு
னெஞ்சொடு தந்த நீழ்புக ழாயும்
விஞ்சிய வானம் விழுதுளி பொய்யா
வளமலைச் சாரன் மஞ்ஞை கூவ
வு ாமகிழ்ந் ததன்குளி ரோடக் கலிங்க
முதவிய வண்மை யொளிரருட் பேகனும்
பதமுற நட்டோர் பலர்க்கு மில்லறம்
பாங்காய் நடக்கப் பரிந்துவேண் டுவன
நீங்கா வன்பா னிறைய நல்கியும்
வாடிய புலவன் வாட்டந் தீரத்
தேடிய நல்லுணத் தெளியத் தந்து
பூண்ட வாரமும் பொருந்துபொற் கடகமு
மீண்ட வளித்தவற் கெழிலார் தன்பெயர்
கூறு தேகியுங் குணக்குங் குடக்கு
மாறு வடக்கு மாண்பமை தெற்குந்
தன்னிசை கவித்த தமிழ்தேர் நள்ளியுந்
துன்னுட னெடுநாட் டோமற விருக்கச்
செய்யுந் தெய்வத் திறத்த தாய
துய்யநல் லமுதூர் சொல்வளக் கருமா
நெல்லியங் கனியை நெடுநாட் டானுறப்
புல்லிய களிப்பாற் பொருந்த வுண்ணுன்
ஔவைக் களித்தே யலகிலாப் புகழ்பெறு

செவ்வைக் கன்மலை செழிதிரு நாடன்
அதிகமா னென்னு மருந்தமி ழாளனு
மதிபெறு புலவர் மனக்களிப் பெய்த
வீரநன் மொழி யின்புற வியம்பி
வாரநல் வாசியும் வளமும் வழங்கிக்
கதிதரு கடவுட் கங்கை மாநீர்
நதியொடு கலைமதி நாண்மலர்க் கொன்றை
சென்னி மிலைந்த திருநுதன் மங்கை
மன்னிய பாக வயைரச்சிலை யோனே
தன்பெயர் நாட்டித் தனிப்பொரு ளியலருட்
டுன்னருஞ் சிறப்பமை தூத்தமிட் புலமை
யாதி மகளா மௌவை களிக்க
வோதுநற் பரிசிலா வுவந்துதன் கொட்டைத்
தந்த காரித் தனிப்பரிக் காரியும்
வந்த கூத்தர் வாழ்வமைந் தெய்த
தன்னூ ரெல்லாந் தனவா தளித்த
பொன்னு ரோரிப் புகழ்மா வோரியும்
அறுகான் மாந்த வலர்நறுத் துளிக்கு
முறுவீ நாக மோங்கிய நெடுவழி
முல்லை படர மொய்ம்பமை பொற்றே
ரெல்லையில் கருணையா லிரங்கி விடுத்த
பாரியு மாகும் பகர்கடை யேழு
நேரியல் வள்ளலா நிகழ்புக ழாளர்
மன்னு வுலகத்து மன்னிய புகழ்நிறீஇ
முன்னூர் தம்முடன் முறைமுறை விடுத்தே

யழியாப் பெரும்பத மடைந்தினி துற்றார்
மொழியாக் கிளைத்தே முழுதுல கும்படர்
தமிழ்மூ வேந்தருந் தனித்தனி
யமிழ்தேய் முத்தமிழ் தன்னொடுந் தம்புகழ்
நிறுத்தி நீத்தார் நிலையா யாக்கை
யருத்தியி னிந்நில வரசைப் பெறுவான்
பின்னர் வழிவழி பேதுற வந்த
மன்ன ரெல்லா மகிழ்தமி ழோரா
வேற்று நாட்டவரே விளங்கிட விந்நா
ளாற்றுகோ லோச்சு மரசரு மவரே
யாங்கில மொழியே யவர்க்குரித் தாகும்
பாங்கமை தமிட்கெங் கோங்குபொன் னீவர்
மற்றுமிந் நாளில் வளர்பொருட் குப்பை
பெற்ற பலரும் பீடிலா வழியில்
வேசைபால் வைத்த வாசையா லவட்கு
நேசமாய்ச் சந்து நிதநடப் போர்க்குங்
கொலைக்கும் புலைக்குங் கொள்ளைகொள் வோர்
[க்கு
நிலைகுலை கட்கு நேரிலா வவைக்குங்
காசை வாரிக் கைக்கொளத் தருவர்
ஓசையா ரின்றமி ழுள்ளுறத் தேர்ந்த
பாவலர் வந்திடிற் பருங்கத வடைத்து
மேவலில் விதமெலா மோவிலா துளுற்றுவர்
கன்னித் தமிழின் கனமுஞ் சுவையு
முன்னி யுணர்ந்தே முழுதுணர் புலவர்

வருத்த நீக்கும் வளப்பொரு ளாளர்
பெருத்தவிப் பாரிற் பேசிடி னிந்நாள்
அரிதே! யரிதே! யந்தோ வரிதே!
வறிதே தமிழை வருந்திக் கற்றுப்
பெரிதே வருந்தல் பேதமை யன்றோ?
விரிநீ ருலகில் வேறுகற் றேமிலை
யந்தோ கெட்டே மறிவிலா தென்றே
முந்தோர் புலவர் மொழிபய னறியா
தித்திறங் கற்றதென் தித்தித் ததாமோ ?
இத்தரை மிசையே யிந்நா ணிலையோ
தமிழ்போற் றுநரிலை தமிழ்கற் குநரிலை
தமிழ்கேட் குநரிலை தமிழ்க்குரு குநரிலை
வாட்டமுற் றலையும் வளமொழிப் புலவரைக்
கேட்டினி தருளுங் கிளரரு ளாள
ரில்லா தோய்ந்த விடர்தரு நிலைத்தால்
அதான்று, சொல்லார் பலநூல் சுவைத்தறி [யூழிலார்
சின்னூல் தானுந் தெளிய முற்றுந்
தன்னை வருந்தத் தான்கல் லாதார்
பண்டித ரென்றும் பாவல ரென்று
மொண்டமிழ்ப் புலவர் தண்டமிழ் நாவல
ரென்னு மின்னோ ரன்ன வெழிற்பெயர்
துன்னுதம் பெயர்முன் றோன்றிட வறிதே
பூண்டு போலிப் புலவராய்த் திரியு
நீண்டு வளர்மருள் நீங்கா நிலைத்தா

வியன்மணி மாலையிற் செயன்மணி விராஅ
யயனிற் பதுபோ லறியா மடமையர்
பெரும்பேர் தாங்கிப் பெரிதுணர் புலவர்
விரும்பேர் குழுவில் விரவிக் கிடத்தலை
மணிதேர்ந் தறியு மருவுகண் ணாளர்போ
லணிதேர்ந் தறிந்தே யருள்வோ ரறிதா
மின்றா சியற்று மிவர்கா லத்தி
னன்றுற வாழ்வார் நல்லாங் கிலமுணர்
பட்டமுற் றவராற் பகர் பி. ஏ. எம். ஏ.
தொட்டவர் பெயரிற் றொடர்ந்து நின்றிடுமே
லிருமொழி சேர்த்தங் கியம்பிடு மாற்றல்
பெறுகில ரேனும் பெரும்பொருள் பெறுவ
ரதன்மே லெழுத்தங் கதிகஞ் சேரின்
பதமுற வதிகம் பணம்பெற் றிடுவர்
வாணாண் முழுதும் வயங்குபல் தமிழ்நூல்
கோணாது கற்றுக் கூரறி வுடையரா
யிருந்தா ராயினு மிருந்தமிட் புலவர்
திருந்தொரு காசுஞ் சேவையாற் பெற்றிடார்
சிற்சில் லோர்கள் செறிகலா சாலையி
னற்றமி ழூட்டு நலம்பெறு கின்றன
ரவரும், ஆங்கில நெடுங்கணக் கதின்முத லிர
[ண்டு
நீங்கி மாறி நிலைபெயர் தன்னைத்
தொடர்தரப் பெற்ற தொடர்புடை யாள
ரிடர்கெடப் பெற்றிடு மியலா தியக்கி

லொருகா லாதலு முணர்கா லருமைய
விதுவும், பெருகா தரத்தொடு பீடுநூல் கல்லா
வெறுவோ ராயினும் வினைகூட் டிடலாற்
றிருகா நோன்மைத் திகழ்முற் பிறப்பிற்
செய்தோர் பெறுவர் செய்யா ரான்ற
மெய்சேர் புலமை விறலோ ராயினு
மெய்துத லின்று லெய்துத லின்றால்
நொய்யரா யுழல்வார் நோற்றிடா வழுவா
விற்றே தமிழ்நிலை யிற்றே தமிழ்மொழி
மற்றே கற்றூர் வாழ்வுறும் வழிகாண்
சிறப்புறு தமிழ்நூற் சிந்தையாற் கற்போ
ருறப்பயன் வேண்டி யுரையெனக் கேட்போர்
தேய்ந்தவிந் நாளிற் றிகழ்நூல் செய்துமன்
னாய்ந்துரை யெழுதியு மறிய வோதியும்
வாழவும் வழியிலை மாநில மதினிடைத்
தாழவு நெஞ்சோ தரிக்ககிற் றிலதிங்
கென்னே நெடுநா ளிருந்தமி ழோதிக்
கொன்னே கழித்தனங் கூர்மதி யிலாம
லரசுசெய் யாங்கில மதனைக் கற்று
விரசுபட் டத்தை விளங்கிடப் பெற்றிடிற்
பொன்னணி பெற்றுப் புகழுடன் வாழ்வோ
மென்னினிச் செய்வதென் றேங்கினன் பல்கா
லொருவகை தேறின னுயர்கோன் பினிது
வருவகை கூடி மருவிய வதனாற்
கலைபயில் கழகக் கவினு சானெனு

நிலையினை யடைந்தே நின்றுவாழ் கின்றேன்
பெருமூ தியத்தினும் பெருகிடு செலவா
லுறுமா கடன்வீழ்ந் துற்றனன் றுயர
மேந்து கிரிமு னிசைநா கம்போற்
பாந்தள் பற்றிய பருமுடற் றேரைபோற்
றூண்டிலிற் பட்டுத் துடித்திடு மீன்போல்
நீண்ட வெயிற்கண் ணெளிந்திடு புழுப்போற்
பருந்து கவ்விய பறவைப் பார்ப்பெனத்
திருந்து வலைப்படு தெருமரு மானென
வாலைவாய்க் கரும்பென வேலைவாய்த் துரும்பென
பாலைவாய்ப் படர்ந்த பாவைநல் லாளென
விரவலர் வரவினை யெதிரே கண்ட
கரவுடை யீயாக் கயவரின் மனமெனக்
கடனுற் பட்டிடுங் கணக்கில் துயரங்
கெடயாம் யாரைக் கிட்டிடு வேமென
முற்ற வறிவான் முதிர்மனத் தாய்ந்து
சற்றிருந் தெண்ணிச் சார்ந்தென் னுடனே
கற்றவோர் செல்வச் சிற்றர சுள்ளி
முற்றவோர் மாலை முழுமணித் தொடைபோற்
பாகுபோற் பாடிப் பார்க்கவே சென்றன
னேகுமோர் வழிதா னிருங்கல் லதர்வழி
யாயினுந் தப்பா தளிப்பா னவனெனப்
போயினன் கால்நணி நோகவே நசைஇ
யன்னவன் பேரு மாளும் பதியும்
பின்னமார் குலமும் பேசிட னாணுவன்

கற்றவர்க் கடைத்திடு கருணையில் கதவான்
மற்றவர்க் களித்திடு மாண்பிலா நிலையா
னூரு ராகி யொன்பதூர் தேடிச்
சீறா றொன்றிற் செறிந்தமை யறிந்து
சின்னு டங்கிச் சிந்தை மெலிந்து
பின்னு ளொன்றிற் பெருமுயற் றியாலே
முன்னுக் கண்டு முழுது மொழிந்து
கன்னு வெனப்பல கனியப் பாடி
யெண்ணிலை காட்டியு நண்ணிலை யோரான்
புன்னிலை பூண்பான் பூரிய வேசைப்
பொதுப்பெண் ணொருத்தி புணர்முலை சரிந்து
கதுப்பெலா மொட்டிய கருநிறத் தோரி
யவள்தரு காம வழியா விரகிற்
றவவெந் தழிவோன் சாற்றிடு குணமெலாங்
குடிவிட் டோடிய குடம்பையே யுளத்தான்
வடித்தமிட் பாவை வந்துதன் னேட்டைக்
காதுறக் கேட்டுக் கடிதுட் சென்றனன்
தீதுசெய் மிடியெலாந் தீர்ந்ததென் றிருந்தே
னென்புகுந் ததுவோ வென்னு யினனே
பின்னவன் வந்திலன் பின்னவன் வந்தில
னின்னமுங் கண்டில னென்றுகாண் பேனே
சென்றவென் பிழையைச் சிந்தித் தறிந்து
பொன்றிடு மனித்தரைப் போய்ப்பா டிடுதே
லின்றிருந் தொழிவோ னன்றிருந் தோங்க
அரனைப் பரனை யவிரிழை பங்கனைக்

கரனை யொறுத்த கடவுண் மாலைக்
கரிமுக வைங்கர நால்வாய்க் கடவுளைப்
பரியென மயிலூர் பண்டித வேளைக்
காமனை யெரித்துக் காலனை யுதைத்தோன்
வாமத் தொளிரு மரகதக் கொடியைப்
படியளந் துண்ட படவராப் பாயலோன்
கடிகமழ் மார்புறை கவின்றிரு வணங்கை
நான்முகன் வாழ்க்கை நாவிண் கிழத்தியை
வான்மொழித் தமிழால் வாழ்த்துவம் பாடுவம்
என்றுளங் கொண்டே யின்புறு தமிழ்ப்பா
கன்றுள மகிழக் கவினப் பாடி
வந்திடு நாளில் வருத்தமிக் கோர்நாள்
நொந்திட வினையால் நோவுறு நாளெலா
மஞ்சலென் றடியே னருகுவந் தருளுஞ்
செஞ்சொன் மறைமுடிச் சிவனார் மகிழ
வம்மொழி கிளக்கு மருமறைக் கூட்டுறை
பைம்பொற் கிள்ளையாம் பருமலை மகளை
இமையப் பொருப்பி னெழிலிளம் பிடியே!
உமையென வுலகியம் புயரிய மானே!
நீரணி கடவு ணேயமார் குயிலே!
சீரணி தோகாய் செவ்வயில விழியாய்!
எழுதாக் கிளவி யேத்திடு குமரி!
விழுமணித் தொடைபுரள் விளங்கணி முலையாய்
வேலனைப் பயந்த விறன்மிகு தாயே!
யாலணி வயிற்றிடை யமைபல வண்டமுஞ்

சாலத் தாங்கித் தழைவுற வீன்றுங்
கோலநல் லெழிலுறுக் கோமளக் கொடியே!
யாலமுண் டவரகத் தமைந்தொளி ரமுதே!
ஏலவெண் ணான்கற மெழிலுடன் வளர்த்திங்
கடியரைக் காக்கு மாரருண் முதல்வி!
கடிகம டாமரை கடுக்குஞ் சேவடி
கருத்திற் பதித்துக் கடையனேன் றுதித்து
வருத்தமெல் லாமுன் மனங்கொள வுரைத்துஞ்
செவிசாய்த் திலைநின் றிருநோக் கருளிலை
நவிநேர் கண்ணாய் நல்லுள முருகிலை
என்பவப் பெருக்கோ வெண்கலி காலமோ
வுன்னருட் செவியு மொளிர்கயற் கண்ணுங்
துன்னரு ளுளமுந் தோமிலா வருண்மிகு
மன்னுதஞ் செயலை மறந்தவென் னளவில்
எனவின்னன மனமுன்னுறப்
பிணங்கின்மொழிக் கணங்கள்பல
செறிந்திட்டமை யறிந்திட்டடு
சுவைமிக்கொளிர் நவையற்றியை
நறும்பாயச முறுஞ்சீரெனச்
சிலகவித்தொடை பலமொழிந்திட
வடியவர்க்கருள் கடிமலர்க்குழன்
மலைவிலியிடத் தலைவிலியுறை
பிறைநுதலுமை குறைவறவெனக்
கிதமுறவருட் பதமொடுவரக்
கருத்துட்கொடு திருத்தென்றுயின்

முடித்தெழுமிரா விடித்திடுவைகல்
கோயிலா நிலையி னுண்ணுணர் கனவிற்
சேயிழை சுமந்த சிறுபார்ப் பனமகட்
கோலந் தாங்கிக் குளிரருண் முகனொடு
மேலவந் தென்னை யின்புற விளித்தினி
யஞ்சலென் வாய்மொழி யனைத்தையுங் கேட்டி
பஞ்செனப் பாடு பலபடும் புலவ
ரெக்கர் நுண் மணலி னெண்ணிடின் மிக்குள
ரக்கணத் தொடுவினை யளவிட் டறியி
னின்னிலை நன்னிலை நீணிலத் தவர்துயர்
தன்னினு யிரத்திற் றனியொரு பங்கு
முனக்கிலை முன்னீ யுஞற்றிய வறத்தான்
மனக்கினி துயரம் வையேல் வானவர்
தனக்கு முண்டே தாங்கருந் துயர்பல
கனக்குற மறைமொழி கருதற மறிந்தே
முற்பிறப் பிடைதவ முறையா விளைத்தோர்
நற்பிறப் பெய்தி நலமே துய்ப்பர்
கற்றிடு நெறிக்கே சொற்றவம் புரிந்து
மற்பொரு ஞற்றிட மகிழறஞ் செய்யார்
மட்டல மிதன்மிசை மாண்கலை வலரா
யெட்டிரு திக்கு மிசைசெல விளங்கினும்
பசித்துயர் முதல்தரும் பாழ்ங்கலி யவரை
முசித்திடு முண்மை முன்னுற வறிவாய்
தமிழ்தேர் புலவர் தமக்கோ ராறு
யமிழ் தார்முகம னருகுவந் துரைத்து

வந்த புலவர் வாட்டந் தவிர்க்கு
மைந்தரு விழைந்த செந்திருக் கையான்
ஒன்று கூட்டிய வுறழ்நா லைந்தென
வின்று மிசைத்திடு மியல்வள் ளல்கள்
தாஞ்சுமந் திருந்த தனிப்புகழ்ப் பொறையை
யாஞ்சுதான் சுமந்த வரும்பெரு வள்ளல்
தனித்தமிழ் வளர்க்குந் தண்ணருட் பெருமான்
குனித்தம் பலத்திற் குலவுங் குழகன்
றனையு மென்னையுந் தன்னுளக் கோயிலி
னீள வமைத்த நெடுநிதி யாளன்
றாய்போ லெவர்க்குந் தண்ணருள் சுரந்தொளி
ராய்பே ரறத்தா னுண்டிப் பட்டி
யென்னுமூ ராரு மன்னவ னென்னுங்
தன்னுயிர் போல மன்னுயி ரளிக்கு
மொப்புயர் வில்லா வுயர்மனு நெறியான்
செப்புபேத் தாச்சிச் சீர்திகழ் பெயரா
னன்னேன் றன்னை யடைந்துன் றமிழை
முன்னுஞ் சீர்தனை முழுமங் கலமுற
வமைத்துப் பாடி னவன்மகிழ்ந் திடுவ
னிமைத்திடு முன்னே யிரிந்திடு முன்கலி
மன்னு மணித்தரை மாண்டமி ழதனு
லென்னுக் கொண்டினி யிசைத்திடே னென்ற
பிள்ளா யதனைக் கொள்ளா யுறனுத்
தாள்ளா யென்மொழி தவறு தருள்வன்
வேதத் தெட்டா வியன்பொரு ளாம்பரன்

நாதநா தாந்தமாய் நல்லொளிப் பிழம்பாய்
விளங்கொரு முதல்வனும் வீற்றமை சேரற்
குளங்கொளுங் கருணை யுந்திடப் பாண
பத்திரன் றனக்காப் பரிந்து திருமுகஞ்
சித்த முருகிடச் சிரமேற் கொள்ள
மதிமலி புரிசையென் மாண்மொழி தொடங்கிப்
பதியுயர் தமிழாற் பாப்பா டலையோ
வித்தக விவன்சிவ பத்தனு தலினாற்
பத்தரைப் பாடல் பரமனைப் பாடலா
மித்தரை கொள்ளு மிதுதக வுடைத்தே
மன்னவன் மாலென மதித்திடு ஞாலம்
பண்ணுந் திருமின் பரவருள் பெற்றவன்
மற்றவர் வணங்கு மாண்புடை யோனால்
நீயினி சொற்கவின் பாவினி சொல்லுக வவன்மே
லென்றிவை புகன்று தன்றிரு வுருவை
மின்றிகழ்ந் தாஅங்கு விளங்கக் காட்டி
மறைந்தாண் மறையுண் மறைந்தாண் முதல்வி
குறைந்தேன் கவலை குளிர்ந்தே னங்கந்
துயில்விடுத் தெழுந்தேன் றுதித்தேன் புகழ்ந்தே
னயில்பிடித் தமரரை யருளிய வேளை
யீன்ற வன்னை யிருமலர்த் தாளை
யான்ற கனவில் யாங்கண் டேமென
வுளமகி ழுற்றே னேங்கினே னோடினேன்
தளதளத் திடாத் தமிழ்ப்பாப் பாடினேன்
தாயே ! சங்கரி ! சாம்பவி ! சதாசிவை !

நாயே னுக்கரு ணன்மலை நீலி!
கால காலி! கபாலினீ! யெனப்பல
வேல விழிநீ ரின்பினி லொழுக
நாத்தழும் பேற நாரணி தன்னை
யேத்திக் காரணி யிசைத்த படிநறும்
பாத்தொடை சிவணிடப் பாடி விரைந்து
மாத்தரை புகழு மன்னுபெத் தாச்சியைப்
போய்நான் கண்டேன் வாய் கோணுது
தாய்நனி புனிற்றுத் தன்னிளங் கன்றை
வந்தணு கும்முறை வளர்பெரு விருப்பொடு
முந்துபொன் னுதன முறைதர வெழீஇ
வந்தெனை மலர்முக மலரத் தழீஇச்
சிந்தை களிக்கச் சிற்சில முகமன்
சொற்றன னற்புட னற்றமி ழுற்றிடக்
கற்றவர் புகழுங் கலைநிறை மதிநேர்
பெத்தாச்சி யென்னும் பெருந்தகை யாளன்
நத்தாச் சிறுமனை நல்வாழ் வளத்தேன்
மணியவிர் பெலன்பெரு மாணவை புக்கதுந்
தணிவில் கனவோ தக்கநன் னனவோ
விந்திர னவையே யெப்படி வந்தேம்
சிந்தை மருளோ மறைநனி சிலம்பொலி
மேருவிற் பித்தர் வியன்மனை யாட்டோ
தேருதற் கரிதெனத் தெளிந்துபின் னுணர்ந்தே
னென்னிரு தோளுந் துன்னுபன் மடங்கா
மன்னி வீங்க மகிழ்நனி சிறந்தேன்

வடதிசைக் கிழவன் மானுபொன் னாளன்
தடவரை நிகராந் தண்டொடைத் தோளான்
செந்தமிட் பயிர்நனி செழித்திங் நிலன்மிசைப்
பைந்துணர் மலியப் படர்ந்தோங் கிடவெனப்
பெரிது வளர்க்கும் பெத்தாச்சி தன்னை
விரிமலர் நீலநேர் விழிகளாற் கண்டது
மிகவெனக் கிருந்த வியனிலை கேண்மோ
பகல்செய் கதிர்முன் பனிபோன்ம் மெனக்கழி
பறந்தன துயரே பரவிய மகிழே
சிறந்ததென் னுளனே சென்றதென் கவலைய
இருக்க வென்றே யியலோ ரிருக்கை
யுருக்கமாத் தந்துபின் னார்வரு நடையா
லுயங்கிக் களைத்தீ ருண்டிகொண் டிடுக
நயங்கொள வந்த நலம்பின் காண்பே
மெழுக வென்றே யென்கரம் பற்றித்
தொழுகை யாளர் தொடர்ந்துபின் னேவரக்
கடிமனை புகுந்து காரியக் காரர்
படிமிசை வீழ்ந்து பன்முறை வணங்கி
நின்றோர் தம்மை நேருற விளித்திங்
கின்றோர் விருந்தா விவர்வந் துற்றார்
நேரியை தண்டமிழ் நெடிதுகற் றுணர்ந்த
பேரியற் புலவர் பெரிதுநீர் காண்மின்
கட்டளை யிதுநீர் கருதிச் செய்மின்
பட்டுடை யனுப்புவேம் பரிமளங் கமழு
நறுவெங் நீர்கொடு நல்லுடன் னெய்கெட

வுறும்ஞ் சனஞ்செய வுடனே யிவரை
யழைத்துச் சென்மி னருமஞ் சனமனை
விழைத்திடு முணவுதெ விட்ட வழங்குமி
னெனமொழிந் தென்னை யின்புற நோக்கிநும்
மனவெழுச் சிப்படி மாறு துறவன
புரிவ ரிவரொடும் போம்புலம் வல்லோய்
விரிமனைக் குள்ளென விடுத்தெனை மீண்டான்
காரியக் காரருங் கருத்துங் கவலையு
நேரியை யச்சமு நிறைநிறை யுட்கொளா
விறைதமக் கிட்ட கட்டளைப் படிதாங்
குறைவற மஞ்சனங் குளிர வாட்டினர்
நீரினீ லமைந்து நிலைத்துள நறுமண
மாரினி யுரைக்கு மாற்றலுள் ளவரா
லவர்பணிந் தருற்று மரும்பணி பலவா
லுவர்பெரு வாரிசூ ழுலகிடை யிதுபோ
லார்புரிந் திடுவார் நேர்பெறு மன்பொடு
சார்மஞ் சனநீ ராடிய பின்னர்
மாசு படிந்த மாண்பிலாப் பீற்றற்
றாசு களைந்து தன்னுபொன் னூலினூற்
பூத்தொழி லிட்ட பொற்புறு பட்டுடை
யேத்தித் தந்துநின் னிடைகொள வுடீஇக்
கொண்மோ வெனவே கொண்டியான் புனைந் [தேன்
கொண்மூப் போலக் கொடுத்தருள் வள்ள
லெங்கள்பேத் தாச்சி யிரும்பெருங் கோயிலிற்

றுங்க வகிலின் றாநறும் புகையைக்
குஞ்சியி னூட்டிக் குணம்பட முடித்தங்
கஞ்செழுத் ததனை யகமுறப் பதித்தே
பூசை முற்றப் பொருந்திட வுனுமுன
மோசையார் மணிநீ றெண்பொருள் பலவுந்
தந்தனர் வந்துமன் முந்துநூன் மார்பினர்
கந்தனை யருளிய கடவுட் பூசை
முட்டற முடித்து முறைமுறை யெங்கண்
மட்டவிழ் கூந்தன் மலைமட மகளை
யுட்டெளி வோடு முறுபூ சனைகள்
தட்டற முடித்துத் தனித்தனி யாகக்
கரிமுகக் கடவுளை யறுமுகக் கடவுளை
யரியைப் பிறரை யமைதர வணங்கி
யன்னையும் பிதாவு முன்னறி தெய்வ
மென்னுந் தெய்வத் துன்னிய வௌவை
பொன்மொழிப் படியே பொருந்துகண் கண்ட
மன்னிரு தெய்வமா மகிழ்தாய் தந்தையைச்
சிந்தையி னிறுத்திச் செங்கணீர் வாரப்
பைந்தமிழ்த் துதிபல பாடி நின்றேன்
நான்மறை பயின்று நாத்தழும் பேறிய
நூன்முப் புரிபுரள் நுவணீ றணிந்த
விருபிறப் பாள னின்புற மலர்ந்த
வொருமுகத் துடனே யொல்லென வந்தெனை
யன்புடன் கிட்டி யையநீர் பசித்தீ
ரென்னுடன் வருதி ரின்னமு துண்ண

வெம்து தலைவ ரிஃதறிந் திட்டா
னமதரண் மனையி னுவலர் பசித்தார்
நலமன் றென்றே நன்மனம் வருந்தி
யலகிலாச் சினத்தோ டடைந்தெமைச் சிறுவ
ரென்றழைத் தேகி யியன்மணி மாடத்
தொன்றிய வுயரெழி லோரறை புக்குப்
பலகையி லிருமெனப் பண்பிற் கூறி
யிலகெழில் வாழை யிலையைமுன் னிட்டுத்
தண்ணுறு விறைநீர் தங்கவள் ளத்தி
லெண்ணுறு வலப்புற மெய்திட வைத்தபி
னிட்டனன் கறியு மின்பமார் புழுக்கலும்
விட்டென் வாயால் விளம்பிடா வளவால்
வெள்ளி மலைபோல் வியன்வா னரிசி
யொள்ளிய புழுக்க லொளிசெய வதன்மேற்
செம்பொற் சிகரஞ் சிவணிய வெய்ப்ப
வம்பொற் பருப்பி னவிய லமைய
வுச்சியி லிருந்தங் கொழுகிடு மாறென
மெச்சுபுத் திருக்குநெய் மேவி வழிதரப்
பற்பல வகையாப் பாங்குட னட்ட
சுற்றிலு மிட்டுள சித்திரச் சொன்றியின்
குவைபல குழுமிய குன்றின் கணமென
நவையற விளங்கி நகைசெயப் பாங்கே
பலப்பல நிறனமை பல்சுவைக் கறிக
ளுலப்பில குவைகுவை யுணர்ந்தன வைத்தனன்
பன்னிறக் குன்றுகள் பற்பல சூழ்ந்தென

மன்னிய துவையல் வகைகளும் வைத்தன
னவரைக் காயைத் துவரைப் பருப்பொடுந்
தவவைத் திட்ட தனிவளக் குழம்பும்
முருங்கைக் காயு முழுவெங் காயமு
மொருங்கமைத் திட்ட வுயர்சாம் பாரும்
புடலங் காயைக் கடலைப் பருப்பொடு
முடலுக் குறுகென வுணர்ந்தடு கூட்டும்
பரிக்கா யாற்செய் பச்சடி தன்னையுங்
கரிக்காய் பருப்புக் கலந்த கறியும்
அப்பைக் காயின் நெய்பெய் துவட்டலும்
வெப்பைத் தணிக்கும் வெண்டயிர்க் கறியும்
உருளைக் கிழங்கின் ஒளிர்தரு வறுவலுங்
கருணைக் கிழங்கின் பரும்புளிங் கறியும்
முப்புடைக் காயின் முதிர்பாற் கறிகளுஞ்
செப்புங் கறிசேர் செழும்புளிஞ் சாறு
மாப்பாற் கஞ்சியு மாநறுந் தயிரு
மீம்பாற் கவின்மதி விளக்கப் பளமும்
முக்கனி வகையும் முதுசுவை யிலட்டும்
பக்கணம் பலவும் பரிந்துமுன் வைத்தன
னென்றலை முறையி லிதுபோற் கண்டிலன்
றுன்றிய வினைகளைத் தொப்பை நிறைய
வொட்டிய வயிறெழுந் தோங்கி நிவந்திட
மட்டின்றி யுண்டி மகிழ்ந்துவாய் பூசி
யொருவ னழைத்திட வுடனே தொடர்ந்து
திருவமை மணிதிகழ் செவ்விய வோரறை

நுழைந்தேன் வெற்றிலை நுண்காய் நறுஞ்சுணம்
விழைந்திடு வாச விலையுயர் பொருளுங்
கொடுவந் தென்முன் கொடுத்தன ளொருவன்
நடுநிலை கோடா நற்குணக் கடலாம்
பெத்தாச்சி வள்ளல் பெருநகை முகனொடு
மெத்தக் கருணை மேவிய வுளத்தால்
வந்துமுன் நின்று வாய்நிறை யின்மொழி
முந்துற வமுது முடித்தினி ரோவென
வருமொழி பலப்பல வழங்குறக் கிளந்து
வருகளைப் பகல மருவுபஞ் சணையிற்
சிறிதுகண் வளர்க சென்றுயான் வருவே
னறியப் பின்னு மளவளா விடுவோம்
தங்கநற் றொழிற்பரி யங்க மிதன்மேற்
றங்கி யுறங்குக தனித்தென வோதித்
தனதுய ரிருக்கை தன்னின் மேவினன்
மனது களித்து மருவினன் றுயில்யான்
சோர்வெலா மிரியச் சுழுத்தியை யடைந்தேன்
சார்நா ழிகைசில தவிர்ந்தபின் விழித்தேன்
மற்றுமோ ரந்தணன் மதிமுக மதனி
லுற்றதன் னுள்ளத் தொளிரன் பொழுக
சிற்றுணக் கொள்ளச் சிந்தைவைத் தென்னுடன்
சற்றுநீர் வருக தமியனேன் பின்னெனக்
கூட்டிச் சென்று குளிர்நீர் தந்தனன்
நாட்டிய விரைகமழ் நறுநீ ரதனாற்
கைகான் முகத்தைக் கழுவினன் சென்றேன்

மெய்கான் மறைமொழி மேவிய விப்பிரன்
கோதுமை மாவாற் கொழுமையாய்ச் செய்த
பாதுமை முந்திரிப் பருப்புடன் கலந்த
வுப்பு மாவு முயர்ரவா தோசையும்
மொப்பு கார மொழுங்கா யிட்ட
நெய்யிற் சமைத்த நேர்தரு தீன்களுந்
தூய்ய சருக்கரை துளாவிக் கலந்த
முதிர்சுவைத் தீன்களும் முறைமுறை கொணர்ந்
[தென்
எதிர்கொள வைத்துநீ ரினிதயின் றிடுமின்
காப்பியோ டீயோ காமர்கொக் கோவோ
தாப்புடை யெதுவோ தாங்குடித் திடுவீர்
கொடுவரச் சொன்மோ கூர்ந்தெனக் கேட்க
நெடுமலைக் கப்புற நீணுடிருந்து
விடுவில தென்ன வங்கமீக் கொணர்தருங்
கொக்கோ குடித்திடக் கொண்ட கருத்தினே
னிக்கோ மனையி லக்கோக் கோவைப்
பருக விரும்பிப் பகர்தரு கோக்கோ
தருதி ரென்று தாழ்க்கா துரைக்கத்
தந்தன னதுவே தனியாப் பாலுடன்
வந்தசீன வளச் சருக் கரையுஞ்
சேரக் கூட்டிச் செவ்விதா யதனை
நேரக் குடித்தே னிலையமு துண்ட
தேவர் போலத் திடம்பெற் றிட்டேன்
பாவதன் மேலே பல்லக் கெனகனி

பூவலம் வரும்புகழ்ப் பொருவில் பேத்தாச்சி
நல்லவை யிருந்து நால்வர்வந் தென்னை
யொல்லென வும்மை யுடன்கொடு வரவென
வெங்கோ பணித்தன னியலறி புலவ
வங்கோர் நொடியின் மருவுவம் வருகெனத்
தாய்நா டிச்செலுந் தனிமக வெனவுள்
ளேய்பே ரவாவொடு மேகின னவர்பின்
விண்ணள வுயர்ந்து விளங்குறு மணிதிக
ழெண்ணருஞ் சிறப்பமை யிரும்பே ரவைக்கண்
மந்திரக் கிழவரு மறைபயி லாளருந்
தந்திரக் கிழவருந் தனிபெரும் வீரரும்
பாணரும் பொருநரும் பல்கலைப் புலவருங்
கோணலி லாங்கிலக் கூர்வெண் டுரைகளுங்
கூத்தருங் குழன்மலர் விறலியர் குழுவு
மேத்துபல் கணத்த விசையாழ்க் கணமும்
முனிவரும் பலரு மொய்த்துட னிருக்கக்
கனிதரு முளனெடு கற்பக நிழலமர்
கண்ணு யிரன்போற் கனமணி குயிற்றிய
பண்ணு ருயரரி பான்மையிற் சுமந்த
வெழிலா தனத்தங் கிறையமர் கொலுவில்
விழியோ ரிரண்டு மிகக்களி கொள்ள
விருந்தமை கண்டே னிருந்தமை கண்டேன்
திருந்துதன் னிருக்கை பொருந்த விடுத்துத்
துன்றிய தன்னிரு தனிவளக் கரங்கொண்
டென்னெரு காதை யின்புறப் பற்றி

யெழிலா தனத்திங் கிருக்கெனப் பணித்துக்
கழிபே ரன்பொடுங் கண்மலர் சாத்தி
யாணர் வளம்பல யாணடைந் துய்ய
மாணமை தமிழ்நன் மங்கலப் பாட்டை
யுள்ளத் தெழுந்த வொழிவிலா வன்பொடு
தெள்ளத் தெளிநீர்த் திருவான் யாறெனப்
பாடிய வலவ பாரவை யிதனிடை
பாடிக் களிநனி பரவச் செய்க
வெண்ணத் தன்றிரு வன்னக் குமுத
நன்னய வாயை நறுவிதா மலர்த்தின
னம்பிகை யடிமல ரன்பொடு மகத்திற்
கும்பிடுங் கையொடுங் குலவுற நிறுத்தி
தெய்வக் காப்புந் தெளியவை யடக்கமும்
பெய்முறை யமைத்துப் பிறங்கு தமிழாற்
பெய்த்துளிக் காரெனும் பேண்கொடை நீண்ட
கைத்துணை வள்ளால்! கருதுருக் காம!
நாட்டு வணிக நற்குலப் பெரும!
பாட்டுந் துறைகளும் பாடும் பாவல!
கற்றவர்க் களிக்குங் கற்பகக் கைய!
மற்பொரு திரடோண் மருவிய திறலோய்!
ஆண்டிப் பட்டியா மமை நாட்டரச!
காண்டிபன் போலுங் கருதமர் சூர!
வொத்தா ரும்புக ழுயர்குணப் பூம!
பெத்தாச்சி யென்னும் பெரும்புகழ் மாலே!
நீயுநின் குலமும் நீணில மிதன்மே

லாயுநின் மக்க ளமைபே ரன்மார்
மிகமிகப் பெற்று மேவுடற் பாங்கி
னகமிக மகிழ வருட்டிரு வெய்தி
யூழி யூழி யுலகினில் வாழி
வாழி வாழி நீணாண் ணீயெனச்
சந்தத் தமிழாற் சாற்றினன் சிலபா
வந்தப் பாவை யருஞ்செவி யார
மாந்திக் களித்து மணிமுடி யசைத்து
நீந்திக் களிக்கட ணிலைகா ணாதுபி
னொல்லென வந்தெனை யுயர்மரு மம்முறப்
புல்லின னவனே போந்தவீ ருயிர்க்கு
மோருடல் போல வுற்றன மவனால்
சாருபொன் னறையை நேருறக் காக்கு
மொருவனை யழைதுய ரொளிர்பொற் றட்டிற்
றிருவுரு மிறைதலை திகழப் பொறித்த
தங்கநா ணயங்கள் தனிமுழு நூறிட்
டிங்குநீ யொருகணத் தெய்திடு கெனாஅக்
கூறிப் பின்னர் கொழுமுழு மணிக
ணாறி விளங்கு நல்விர லாழிக
ணன்மார் பிலங்கு நயன்சேர் பதக்க
மின்னார் கடகம் வெகுவிலைக் கடுக்கன்
மன்மதிப் பேறிய மணியணி பலவுந்
துன்னு மயிரிழைத் தோமில் காஷ்மீர்
பண்ணுகம் பளங்கள் பரும்பொன் னுடைகள்
கொன்னுனைப் பல்பொறிக் கொடுவராச் சட்டை

யதனினு ஞயமுறு யாணர்நல் லாடைகள்
பதமமை நல்லணப் பரவொளிப் பாகையுந்
தன்னவா வளவிற் சட்டெனக் கொடுவரப்
பின்னு முரைத்துப் பின்னமில் பொற்றொடர்
தொடக்கிய தங்கத் தொழிலமை நாழி
யடக்கிய காட்டு மவிர்தரு வட்டமு
மதிலுறத் தூங்க வண்கவிச் சிங்கந்
துதி தமிழ் வல்லென் றேமில் பட்டமுந்
தந்து தீட்டிய தங்கப் பதக்கமு
மெந்தன் மனவவா விசைந்தமைந் திடநனி
எடுத்தெடுத் தென்கை கொடுத்தன னெனக்கங்
குடுத்தின னணிந்தன னொளியுறப் புனைந்தன
னென்னைமுன் கண்டோ ரிவன்யா ரேயெனக்
கனைகட லுலகிற் காவல னேயென
வழகுசெய் திட்டா னவனருள் வாழி!
பழகுய ரவன்கொடை பார்மிசை வாழி!
யவன்திருச் சமுக மடைந்துன் வறுமை
தவவுரைத் திடுமுன் றமியனேன் போலத்
தப்பிலா வளப்பல தாழ்க்கா தடவை
யெப்பிலா னருள்பெறு முளவுங் கூறுவன்
செப்பரு மெய்ப்பொரு ளறிந்த சீரிய
னிப்புவி தன்னி லிருங்கலி வாட்ட
மண்செறி சுவர்கண் மழையாற் கரையக்
கண்ணெனப் புண்ணெனக் காட்டுபல் லோட்

[டைகள்

கொண்ட கூறை யோலைக் குடிலி
லொண்டி நாயு மூர்திரி யளகு
முள்ளே நுழையா வுத்தியா விட்ட
வெள்ளோ லையினால் வேய்பிளாச் சதனாற்
செய்த படலாஞ் சிறுகத வடைத்தங்
கெய்த வாம்பி யிருந்து பூத்த
விருங்கோ டுயர்ந்த பொருந்தோ ரடுப்பில்
வருங்கா ரன்ன வளர்செறி கூந்தலோ
வெண்ணெய் மறக்கக் கயல்விழி யிரண்டோ
நண்ணுமஞ் சனத்தை நாள்பல மறப்ப
வளர்திரு முகனோ மஞ்சளை மறக்கத்
தளர்தரு மெய்யோ தாலி யன்றிப்
பணியெலா மறக்கப் பாகனா லிடையோ
மணிதுகின் மறக்க வாருவா ராகப்
பலபல கிழிகொள் பருத்திச் சிற்றுடை
நலமுற ஊசினூல் நாடிட லின்றித்
துன்னிய முடிபல மன்னிய கொள்ளச்
சின்னத் துணியுடை பற்றிச் சிறுவ
ரம்மகோ பசிவயிற் றதிகம் வருத்த
வெம்முயிர் சோர்வதா லேது முண்ணத்
தருதி தருதி யென்றிழுத் தேங்கி
யுறுதியிற் பற்றிய வொருபெரும் பூசைவா
யெலியென வொலிப்ப வேங்கி யுள்ளம்
புலிவலிப் பேழ்வாய்ப் புல்வாய் போல
சோர்தரு மனைவி சோருமிச் சிறுவர்

நீர்பெய் கூழு நேர்ந்திலா திவணே
மடிதலென் னூழே மண்டையி னெழுத்தே
படிதனி லித்துயர் படுபவர் யாரே
யெனமனம் பலபல வெண்ணிமிக னைய
இனவிளஞ் சிறுமகார்க் கின்மொழி கூறி
யொடுங்கிடை நுடங்க வொல்லெனத் தாமுறை
யிடுங்கிடு கடையா வெண்ணரு கணச்சித
லரித்த காழ்சே ரமைமுதுக் குச்சி
லுரித்தென விடுத்தொள் ளொளிப்புறம் போ[ந்து
விரித்து வெண்மலர் விளங்க முளைத்த
பறித்தெவ ருங்கொளாப் பான்மைய தான
குப்பை வேளையின் கொழுவிலை யதனைச்
செப்பு கிள்ளைச் சிறுவா யனைய
நகத்தாற் கிள்ளி நயந்துதன் குச்சி
லகத்தே கொடுபோ யடுசரு கெடுத்தங்
கீட்டித் தீயை மூட்டி வேக
நீட்டிய நாள்வரு நேரியை விரிசன்
மட்கலத் திட்டு மற்றவை வெந்தபின்
னுப்பிற் கும்வழி யொன்று மிலளாய்
வெப்புறு பதத்தில் விரும்பி யெடுத்து
மக்கட் கீந்து மருவிய பசியறத்
தக்க வுணவிது சட்டென வுண்மின்
றந்தை வருவர் தருபொரு ளோடு
வந்தபின் சோறு வளமாச் சமைத்து

நும்பசி யடங்க நுமக்கிடு வேன்யா
னம்ம கண்ணே யருந்துமி னென்று
விக்கண் யாரு மெங்குவந் திடுமோ
மிக்க விழிவா விளம்பிடும் வெளியி
லென்னுமெண் ணத்தாற் றுன்னிய நாணொடு
முன்னுறு படலை முடுக்கி யுதைந்திருந்
தண்ட வறுமையே யோங்கிய வாழ்க்கை
கொண்ட புலவர் கோடியென் கணக்கில்
வந்து வந்து வறுமையோர் கனவா
முந்துவிட் டோட முழுவளம் பெற்றனர்
தனதனே யென்னத் தருநிழற் கோவென
வினமொடே களித்திங் கினிதுவாழ் கின்றனர்
செம்பொருட் சிவத்தின் சீரருள் பெறுவா
னம்பியல் வழியு நன்கமைந் துய்ந்தனர்
அதனால், நீயு மேகுக நிறைமும் முரசங்
காயும் படியென் ஞான்று மமைந்தினி
தொலிக்கு மவன்ற னுயர்தலை வாய்க்குக்
கலிக்குப் பயந்து கலங்குறு புலவ!
கேளவன் பதியுங் கேளவ னிருப்பு
முழுமணித் திரளும் விழுமிய பொன்னுந்
தழுவிய கொண்டோல் விழுமெனு மொலி [யொடு
மருவிகள் பற்பல மருவிய வீழ்தரு
முறமுறழ் குன்று மோங்கிய வசோகமு
மாரமுந் தேக்கு மகிலு நாகமும்

வேர லைவனந் தோரை யேனலும்
விண்கிழிக் தேறி விளையுஞ் சாரலுங்
கண்ணொளிர் தோகைக் களிமயிற் குழுவுங்
கிள்ளையின் றிரளுங் கிளர்பெருஞ் சீயமும்
வெள்ளிய தந்த வெங்கட் களிறும்
விடாவடி வல்லுகிர்க் குடாவடித் தொகுதியுங்
கடாவடித் துன்னுங் கடுமறப் புலியு
கோதக வின்றிப் போத வுறைபெரு
மேதமி லிடங்கொளு மிரும்பெருங் குறவர்
கானவர் வாழுங் கவின்குடிக் குரம்பையு
ஞானக் குறிஞ்சி நல்லிசை யுர்மிகு
நிரம்பயில் வேலோன் நேருற வாழும்
வரம்பிலா வளத்து வரைக்குறிஞ் சியையுங்
கராதரக் கபாலக் கன்னிவாழ்ந் திருக்கும்
பாரைக் குராவும் படர்சினை மராவுங்
காரையுங் கரிந்த சூரையு மிருப்பையும்
வேரையும் வெப்ப மேவித் தாக்கத்
தாருங் கரிந்து தோன்றுங் கள்ளியு
மாரும் வெருக்கொள வமையப் பரந்துமண்
ணுள்செய் பகலோ னறுங்கதிர் மண்ணைப்
போழ்ந்துள் வெதுப்புறப் புறம்போந்து
[பொறிந்த
சுடுமணற் பரப்பமை சூழ்பெருங் கானலுங்
கடுவிசைப் புரவுங் கழுகும் பருந்து
மெருவையு மலிய விகல்செந் நாயு

மருவிய கொண்டு மாறு வின்னிசைப்
பாலைப் பண்ணொளிர் பாலையென் சுரணையுஞ்
சோலையுங் காவுஞ் சூழ்துறுஞ் சுனையுங்
கான்யா றும்முறக் கான வாரண
மான்முயல் திரிதரு மாண்பொடு சிறந்த
குல்லை முல்லை குருந்தங் காயா
வெல்லையில் பொன்னீ னின்பமார் கொன்றையுந்
தா[ ]றுக் கதிர்வரகு மேற்றுத் தொறுவிரையு
மா[ ]றுயர் பொன்னணி மானைக் காய்ச்சியர்
கு[ ]வையுந் தீங்குழ லிசையுங் குறையா
பரவை னுயின் றருட் பாம்பணை யோனுறை
முல்லையின் றிணையா மொய்கா னாட்டையுஞ்
செல்லையொத் தொளிர்குழற் சிற்றிடைப்
[பாத்தியர்
சிற்றி லிழைத்துச் செறுக்கி யாடிடும்
மற்றிரை சாரு மணற்பெரும் பரப்பு
மிடம்படத் துணர்விடு மடம்பின் கானமுந்
தடந்தொறும் வெண்முகை தண்ணொளி விரியு
நாகமுங் கைதையு நாடிட மெல்லா
மாக மளாவி வளரப் பொலிந்தநற்
பணிலந் தவழும் பணிகழிக் கானலு
மணிநித் திலம்புர ளலர்முலைப் பரத்திய
ருணங்குமீன் பகரு மோங்கொலிக் களமு
மிணங்கப் பளாய கணங்கொளுப் பளமுங்
களிகள் மானக் கலங்க னேங்கு

நளிகொள் ளுவர்நீர் நற்றுறை செறிந்த
வருணன் மேய பெருமண லுலகெனுந்
திருவரு நெய்தற் றிணையுங் கொண்டு
தளீஇய விளங்குந் தண்ணரும் பண்ணையும்
வெளீஇய நீர்தரு வியன்பல கால்களுங்
கமலங் காவி கழுநீர்க் கொள்ளைகள்
விமலமா மலர்ந்த மிடைமடைக் கயமும்
வாழையுங் கமுகு மாவும் பலாவும்
பாளைத் தெங்கும் பகர்செந் நெல்லுங்
காஞ்சியும் வஞ்சியும் பூஞ்சினை மருதமுந்
தீஞ்சா ராலையுந் திகழிட மெல்லா
மன்றி னாரை யன்னம் போதா
நன்னிறக் கம்பு ணகுவெண் குருகு
தாரா வெருமை சார்நீர் நாயிவை
நேரா நிறைந்த நிலைகளி யோடும்
வாழும் வளத்தொடு மருதயா ழொலிக்குந்
தாழுமூ ரில்லாத் தழுவிய மூதூர்
பேரூர் கொண்டு பிறங்கிடு நிலனுங்
காரூ ரிந்திரன் கலந்துறை கொள்ளு
மருதத் திணையு மருவிய கொண்ட
வருதிரு நாட்டு வளவர சானோன்
பொன்னா டொத்த நன்னா டாகும்
முன்னா ராண்டிப் பட்டியென் மூதூர்
காக்குங் கோமான் கானாடு காத்தா
னாக்கிய தவத்தா லங்கவ தரித்த

பாக்கிய சீலன் பகர்சென் னைக்கணும்
நீக்கமில் செல்வ நீண்மது ரைக்கணும்
கரிசிலாத் தூய திரிசிர புரத்தும்
பரிசின் மாக்கள் பயன்பெற் றுய்யப்
பருமா ளிகைகொடு பெருமித மாவாழ்
திருவார் செல்வஞ் சிறந்திடு செம்மல்
இங்கவற் காண லெளிதுநம் மவற்குப்
பொங்குமாற் றுரைப் போர்தொலைத் துயர்ந்த
வாகை மிலைந்த வோகையந் தோளா
னீகை கருவிமேல யினிதுகற் றேறிய
வியல்பெரு மண்ண லெண்ணி யரசர்கள்
செயல்தமக் கென்றுஞ் சேர்ந்திருந் திடுவா
னளப்பருந் திறையொடு மடைந்துகாத் திருக்கும்
வளப்ப முற்ற வளர்பெரு வாயிலா
னரசற் காண்டற் கருமைய னெனினும்
பரசிடும் புலவ! பாரிய சமுகம்
நீபெற் றிடுவை நீகடி தேகுக
மாபெற் றமைந்த வளரவன் சமுகங்
குடாவடியுங் கடாவடிக்கு
மறப்புலியுந் திறற்களிறு
மாறலைத்தங் கூறமைக்கும்
வன்கணரும் புன்கணரும்
பல்விடத்த கொல்லரவுந்
துன்புறுத்திடு மென்றுளத்திடு

மையமிக்கு நைய லுள்ள
நெறியினெல்லாங் குறியினிட்ட
வீரர்வாள் சேரக்கை
நின்றிருப்பர் சென்றறிந்தேங்
காதம்பல வேதந்தரு
மென்றுகவல் தான்றலொழி
மனவேக மெனவேகும்
புகையிரதம் வகையுடனே
தாங்கியுனைப் பாங்கிற்செலு
மயவிரத நயமிலையென்
றெண்ணுவையேற் றிண்ணியதாப்
பொறிவிசையா லறியொலியின்
காலெனச்செலுங் காலமைந்திடு
மோட்டாருனை நீட்டாறெலாம்
வாட்டேறு தோட்டாகக்
கொண்டுனையங் கண்டிடுமால்
சேர்ந்திடு நாழிகை சிலசெல் வளவி
லார்ந்தமங் கலமுழ வறாஅ மூதா
ராண்டிப்பட்டியை யடைந்துள் ளேகி
வேண்டி பணிக்கட லீண்டிற் றுமெனு
மாவண வீதியு மமைச்சர் வீதியுங்
காவலர் வீதியுங் கடந்து செல்லி
னாரி நாப்ப ணுயர்பொன் மலையெனக்
கூரிய பலதொழில் கொண்டு கோலமாய்த்
திருமகள் குலவுஞ் செம்பொற் சிகரமா

வுருமிக வமைந்த வுயர்பெருங் கோயிலை
விளங்கக் காண்பாய் மேவியங் கணுகிக்
களங்கமி லுளத்தொடு சாத்தங் கிருக்கும்
வாயிலோர் கேட்க வளர்தமிழ்ப் புலவ
னென்னச் சொலுமுன நயந்துணை யண்மி
வாவென வழங்கும் வண்மை யாளன்
திருச்சமு கக்குச் சேரத் துணையொடு
பரிச்சென விடுப்பர் படர்ந்து பற்பல்
வாயில் கடந்துபின் வளப்பே ரவையை
யாயுநன் கண்ணு ளக்கற் கரிதா
மணியு மழகு மவிர்தரக் காண்பாய்
திணிபெரும் வீருந் திருவமை நூலரு
மான்றபே ரறிஞரு மணிதமிழ்ப் புலவரு
மேனரு சூழ்தர வியலா தனத்தி
லமரா பதியி னரசனே ! யென்னத்
தமரா யாருந் தழுவியங் கிருக்கு
மித்தரை புகழும் பேத்தாச்சி யென்னு
முத்தமன் றன்னை யுன்னிரு கண்ணுங்
களிக்கக் காண்பாய் கண்டவ
னளிக்க விருநிதி யடைந்துவாழ் குவையே.

அ. சுந்தரநாதன்.

முற்றிற்று.

## வெண்பா.

போற்றுந் தமிழ்ப்புலவர் பூதலத்தில் வாழவெனச்
சாற்று மருளுருவாத் தானுதித்த—வேற்றமிகு
பேத்தாச்சி வள்ளல் பெரும்புகழைப் போர்த்தன்றோ
வித்தா ரணிசிறந்த திங்கு.

போதத் தமிழ்வளர்க்கப் பூதலத்தி லேபிறந்த
சீதக் கலைமதிநேர் செம்முகத்தான்—எதமிலா
ஆண்டிப்பட் டிக்கராசா யாளுமுயர் பேத்தாச்சி
நீண்டுலகில் வாழி நிலைத்து.

அ. சுந்தரநாதன்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 14 | பவியென | ரவியென |
| 3 | 36 | யுறுவீழ் | யுறும்வீழ் |
| 7 | 134 | வயைரச்சிலை | வரைச்சிலை |
| 8 | 153 | தனித்தனி * * | தனித்தனி யினிதா |
| ,, | 159 | வேற்று நாட்டவரே | வேற்றுநாட் டவரே |
| 10 | 208 | றொடர்ந்து நின்றிடுமே | றொடர்ந்துநின் றிடுமே |
| 13 | 283 | ணெருத்தி | ஞெருத்தி |
| 16 | 372 | யமிழ் தார்முகம | யமிழ்தார் முகம |
| 18 | 411 | நீயினி சொற்கவின் | நீயினி, சொற்கவின் |
| 19 | 430 | வாய் கோணுது | வாய்கோ ணுது |
| ,, | 440 | பெலன்பெரு | பொலன்பெரு |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 21 | 484 | நீரினீ | நீரினி |
| 23 | 530 | விறைநீர் | விரைநீர் |
| 24 | 569 | யுண்டி மகிழ்ந்துவாய் | யுண்டு மகிழ்ந்துவாய் |
| 26 | 610 | விடுவில தென்ன | வடுவில தென்ன |
| ,, | 616 | வந்தசீன வளச் சருக் | வந்த சீன வளச்சருக் |
| 27 | 631 | தனிபபெரும் | தனிப்பெரும் |
| 28 | 666 | மமை நாட்டரச! | மமைநாட் டரச! |
| 29 | 684 | யழைதுய | யழைத்துய |
| 30 | 703 | வல்லெனன் | வலனெனன் |
| ,, | 714 | வளப்பல | வளம்பல |
| ,, | 715 | யெப்பிலா | யொப்பிலா |
| 39 | 928 | மேனரு | மேன்று |
| ,, | 931 | புகழு | புகழும் |

0 6

Cudg
1378

Chanell
22586